MAALAI MALAR

30 AUG 2023

PAGE 2

# புதுவை பல்கலைக்கழகம் அரபிந்தோ சொசைட்டியுடன் ஒப்பந்தம்

புதுச்சேரி, ஆக.30—

புதுவை பல்கலைக்கழகம், அரபிந்தோ சொசைட்டி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

நிகழ்ச்சிக்கு துணைவேந்தர் குர்மீத்சிங் தலைமை வகித்தார். பதிவாளர் ரஜ்னீஷ்பூடானி, அரபிந்தோ சொசைட்டி தலைவர் பிரதீப்நரங், சர்வதேச உறவுகள் பேராசிரியர் சுப்பிரமணியம் ராஜி, புரிந்துணர்வு ஒப்பந்த ஒருங்கிணைப்பாளர் ரிச்சா திவாரி ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்த ஒப்பந்தம் மூலம் மாணவர்களுக்கு பயிற்சிகள், பயிலரங்கு, கருத்தரங்கு, கலந்துரையாடல், குழு மாற்ற வழிகள் மேற்கொள்ளப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட படிப்புகள், ஆய்வு திட்டங்களை தொடங்கவும், அரவிந்தரின் அரசியல் சிந்தனை, ஒருங்கிணைந்த கல்வி கொள்கைகள் குறித்த சிறப்பு படிப்புகள் தொடங்க முடியும்.

நிகழ்ச்சியில் பேராசிரியர் தரணிக்கரசு, நிதி அலுவலர் லாசர், முதன்மையர்கள், துணை தலைவர்கள் கலந்து கொண்டனர்.

THE NEW INDIAN EXPRESS

PAGE NO: 05

DATE: 30.08.2023

## Pondy Univ to collaborate with Aurobindo society

Puducherry: Pondicherry University and Sri Aurobindo Society have formalised an MoU for advancing collaboration and fostering transformation. The signing ceremony was held at the executive council hall of the university. Vice Chancellor of Pondicherry University Gurmeet Singh said the MoU will offer comprehensive developmental opportunities for the students. Pradeep Narang, chairman of SAS, Richa Tiwari, Chair of SAS and others attended the event.

THE HINDU

PAGE NO: 03

DATE: 30.08.2023

# Spot admission for vacant PG seats in Pondicherry University today

The Hindu Bureau
PUDUCHERRY

Pondicherry University has decided to fill the vacant seats with spot admission to various 5-year Integrated PG programmes, based on the results of CUET(UG) - 2023 on August 30 at 10 a.m.

The interested candidates who desire to take admissions in the Integrated PG programmes for the academic year 2023-24 based on the CUET(UG) - 2023 can physically report to the respective Heads of Departments.

The admission will be made as per the order of merit / ranking from among those who report against the available vacancies.

Candidates should come with all necessary original certificates. The preferences for the selection of candidates at the time of spot admission are given on the University website.



The preferences for selection of candidates at the time of spot admission are given on the University website. FILE PHOTO

Further, the candidates may refer to the information brochure available on the University website for the eligibility criteria and the required domain subject(s) for the programmes at: www.pondiuni.edu.in/admissions-2023-24/.

HINDU TAMIL

PAGE NO: 03 DATE: 30.08.2023

# ஒருங்கிணைந்த முதுநிலை படிப்புகளுக்கு புதுவை பல்கலை.யில் இன்று நேரடி சேர்க்கை

● புதுச்சேரி

புதுவை மத்தியப் பல்கலைக்கழகத்தில் இன்று காலை 10 மணிக்கு கியூட் நுழைவுத் தேர்வில் பெறப்பட்ட மதிப்பெண் அடிப்படையில், 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுநிலை படிப்புகளுக்கு நேரடி மாணவர் சேர்க்கை நடக்கிறது.

பல்கலைக்கழகத்தில் சேர விரும்பும் மாணவர்கள் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களிடம் நேரடியாக தகவல் தெரிவிக்கலாம். பின்னர் தரவரிசையின்படி காலியிடங்களுக்கு மாணவர் சேர்க்கை நடைபெறும். இந்த நேரடித் தேர்வில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் அசல் சான்றிதழ்களுடன் வர வேண்டும்.

நேரடி சேர்க்கையின்போது விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுக்க விருப்பத்தேர்வு பல்கலைக்கழக இணைய தளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

இத்தகவல், பல்கலைக்கழக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

DINAKARAN

PAGE NO: 14 DATE: 30.08.2023

அரவிந்தோ சொசைட்டியுடன்

# புதுவை பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்



புதுவை பல்கலைக்கழகம் மற்றும் அரவிந்தோ சொசைட்டி இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் துணைவேந்தர் குர்மீத் சிங் முன்னிலையில் கையெழுத்தானது.

**புதுச்சேரி, ஆக. 30:** புதுவை பல்கலைக்கழகம் மற்றும் ஸ்ரீஅரவிந்தோ சொசைட்டி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து நிகழ்ச்சி நடந்தது. புதுவை பல்கலைக்கழக துணை வேந்தனர் குர்மீத் சிங் முன்னிலையில் பதிவாளர் ரஜ்னீஷ் பூடானி, அரபிந்தோ சொசைட்டியின் தலைவர் பிரதீப் நரங், புல முதன்மையர் சுப்ரமணியம் ராஜூ, ஒருங்கிணைப்பாளரும், புதுவை பல்கலைக்கழகத்தின் அரவிந்தோவின் இருக்கையின் தலைவருமான ரிச்சா திவாரி ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக இயக்குநர் தரணிக்கரசு, நிதி அலுவலர் லாசர், புலமுதன்மையர்கள், துறை தலைவர்கள் மற்றும் முனைவர் அறிஞர்கள் கலந்து கொண்டனர். இவ்விழாவில் ஒருங்கிணைப்பாளர் ரிச்சா திவாரி பேசுகையில், இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் பயிற்சிகள், பயிலரங்குகள், கருத்தரங்குகள், விவாதங்கள், விளையாட்டு நிகழ்வுகள், கலந்துரையாடல் குழுக்கள் மாற்றத்திற்கான வழிகளாக மாறும் என்றார். துணைவேந்தர் குர்மீத் சிங் பேசுகையில், அரவிந்தரின் தத்துவத்தை புரிந்துகொள்வது காலத்தின் மிக தேவை. எப்போதும் வளர்ந்து வரும் சமூக இயக்கவியலுடன் அரவிந்தரின் போதனைகளும் தத்துவங்களும் ஆழ்ந்த ஞானம் மற்றும் பொருத்தத்தின் கலங்கரை விளக்கமாக நிற்கின்றன என்றார்.

DINAMANI

PAGE NO: 02

DATE: 30.08.2023

# புதுவை பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்



**புதுச்சேரி, ஆக.29:** ஸ்ரீ அரவிந்தர் அறக்கட்டளையுடன் (சொசைட்டி) புதுவை மத்திய பல்கலைக்கழகம் கல்வி மாற்றத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டது.

புதுவை மத்திய பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு துணைவேந்தர் குர்மீத்சிங், ஸ்ரீ அரவிந்தர் அறக்கட்டளை தலைவர் ஸ்ரீ பிரதீப் நரங் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பல்கலைக்கழகப் பேராசியர் சுப்பிரமணியம்ராஜூ, அரபிந்தோ இருக்கைத் தலைவரும், புரிந்துணர்வு ஒப்பந்த ஒருங்கிணைப்பாளருமான ரிச்சா திவாரி ஆகியோர் ஒப்பந்த ஆவணங்களில் கையொப்பமிட்டு பரிமாறிக்கொண்டனர் (படம்).

இந்த ஒப்பந்தம் மூலம் மாணவர்களுக்கான பயிற்சிகள், பயிலரங்குகள், கருத்தரங்குகள், விவாத அரங்குகள், விளையாட்டுகள், குழு மாற்றத்துக்கான வழிகளை ஏற்படுத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்படும் என கூறப்பட்டது.

மேலும், பல்கலைக்கழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட படிப்புகள், ஆய்வுத் திட்டங்களை தொடங்கவும், அரவிந்தரின் அரசியல் சிந்தனை மற்றும் ஒருங்கிணைந்த கல்விக் கொள்கைகள் குறித்தும் சிறப்புப் படிப்புகள் தொடங்கவும் ஒப்பந்தம் மூலம் வழிகாணலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில், பல்கலைக்கழக ஆய்வுகளின் இயக்குநர் தரணிக்கரசு, பதிவாளர் ரஜ்னீஷ்பூடானி, நிதி அலுவலர் லாசர், புல முதன்மையர்கள், துறைத் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

DINAMALAR

PAGE NO: 01

DATE: 30.08.2023



புதுச்சேரி பல்கலைக்கழகம் மற்றும் அரபிந்தோ சொசைட்டி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

# அரபிந்தோ சொசைட்டியுடன் புதுச்சேரி பல்கலை ஒப்பந்தம்

**புதுச்சேரி, ஆக. 30–**

புதுச்சேரி பல்கலை மற்றும் அரபிந்தோ சொசைட்டி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

நிகழ்ச்சிக்கு, துணை வேந்தர் குர்மீத்சிங் தலைமை தாங்கினார். பதிவாளர் ரஜ்னீஷ் பூடானி, அரபிந்தோ சொசைட்டி தலைவர் பிரதீப் நரங், சர்வதேச உறவுகள் பேராசிரியர் சுப்ரமணியம் ராஜி, புரிந்துணர்வு ஒப்பந்த ஒருங்கிணைப்பாளர் ரிச்சா திவாரி ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம், மாணவர்களுக்கான பயிற்சிகள், பயிலரங்கு, கருத்தரங்கு, கலந்துரையாடல், குழு மாற்றத்துக்கான வழிகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட படிப்புகள், ஆய்வு திட்டங்களை தொடங்கவும், அரவிந்தரின் அரசியல் சிந்தனை மற்றும் ஒருங்கிணைந்த கல்வி கொள்கைகள் குறித்த சிறப்பு படிப்புகள் தொடங்க முடியும்.

நிகழ்ச்சியில் பேராசிரியர் தரணிக்கரசு, நிதி அலுவலர் லாசர், புல முதன்மையர்கள், துணை தலைவர்கள் கலந்து கொண்டனர்.